பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 03 2024 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷ்வாணி

## தலைப்புச் செய்திகள்

1. கட்டமைப்பு திட்டங்களை சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. அருணாச்சலப்பிரதேசம் என்றென்றும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியே என்று மத்திய அரசு உறுதிபட தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தில் மக்களவை தேர்தலுக்கான அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

4. தமிழகத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் குறித்த புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

5. தாய்லாந்து சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shetty** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*- இனி விரிவான செய்திகள் -*

<<<<>>>>>

கட்டமைப்பு திட்டங்களை சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று மத்திய பொதுப்பணித்துறை பொறியாளர்களிடையே, உரையாற்றிய அவர், நாடு முழுவதும் கட்டிடங்கள் சாலைகள், இதர கட்டமைப்பு திட்டங்கள், நீடித்த – பருவ நிலை மாற்றத்திற்கு உகந்ததாக அமைய வேண்டும் என்று கூறினார்.

எதிர்கால சவால்களை உறுதியாக எதிர்கொள்ள பொறியாளர்கள் புதிய அணுகுமுறையுடன் செயலாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இளம் பொறியாளர்கள் தொழில்நுட்ப அடிப்படையில் புதிய ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<>>>>>

தர உத்தரவாத இயக்குநரகத்தை மறுசீரமைப்பதற்கான அறிவிக்கையை பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு உற்பத்தி துறையின் தர உத்தரவாத நடைமுறைகளை விரைவுபடுத்துவதற்கு இது வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி அடிப்படையிலான தர உத்தரவாதத்தை ஒரே நிலையாக வழங்குவதை உறுதி செய்வதுடன் அனைத்து நிலைகளிலும் பாதுகாப்பு உபகரண தொழில்நுட்ப ஆதரவை ஒற்றைசாளர முறையில் வழங்கவும் இந்த அறிவிக்கை வகை செய்யும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

பிஜூ ஜனதாதளம் கட்சியில் இருந்து அண்மையில் விலகிய கட்டாக் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. **Bhartruhari Mahtab** இன்று பிஜேபியில் இணைந்தார்.

புதுதில்லியில் உள்ள பிஜேபி தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் மூத்த தலைவரும் மத்திய அமைச்சருமான திரு. தர்மேந்திர பிரதான், கட்சியின் பொதுச் செயலாளர் திரு. வினோத் தாவ்டே ஆகியோர் முன்னிலையில் அவர் இணைந்தார்.

இதற்கிடையே, ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சி தொகுதி பிஜேபி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. **Ram Tahal Choudhary** காங்கிரசில் இணைந்துள்ளார்.

இவர் புதுதில்லியில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு. **Ghulam Ahmed Mir,** திரு. **Pawan Khera** ஆகியோர் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்தார்.

<<<<<>>>>>

மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுக்க பிஜேபி தவறிவிட்டதாக காங்கிரஸ் குறைகூறியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அகில இந்திய மகளிர் காங்கிரஸ் தலைவர் திருமதி. **Alka Lamba,** பிஜேபியின் திரு **Brij Bhushan Singh**-க்கு எதிராக பிஜேபி நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று கேள்வி எழுப்பினார்.

<<<<<>>>>>

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலின் அமலாக்கத்துறை காவலை ஏப்ரல் ஒன்றாம் தேதிவரை நீட்டித்து தில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுபான கொள்கை வகுக்கப்பட்டதில் முறைகேடாக நிதி பரிவர்த்தனை நடைபெற்றதாக தொடரப்பட்ட வழக்கில் கடந்த மார்ச் 21-ம் தேதி திரு கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டார்.

அமலாக்கத்துறை காவல் முடிவடைந்த நிலையில் திரு. கெஜ்ரிவால் சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி **Kaveri Baweja** முன்பு ஆஜர்படுத்தப்பட்டார்.

**<<<<<>>>>>**

பெங்களூருவில் உள்ள இந்துஸ்தான் ஏரோநேடிக்ஸ் நிறுவனம் முதலாவது அதிநவீன இலகுரக போர் விமானமான தேஜாஸ் **MK1A-** வை வெற்றிகரமாக தயாரித்துள்ளது.

இந்த போர் விமானத்தில் மின்னணு முறையிலான ரேடார், தொலைத்தொடர்பு கருவிகள் போர் திறன் வசதிகள் போன்ற அதிநவீன அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும், இந்த விமானத்திற்கு வானிலேயே எரிபொருள் நிரப்பும் வசதியும் உள்ளதாக இந்துஸ்தான் நிறுவனம் தெரிவித்துள்ளது.

**<<<<<>>>>>**

அருணாச்சலப்பிரதேசம் என்றென்றும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியே என்று மத்திய அரசு உறுதிபட தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், இந்த விஷயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது என்று கூறினார்.

அருணாச்சலப்பிரதேசம் தொடர்பாக சீனா பல முறை ஆதாரமற்ற முறையில் உரிமை கொண்டாடியபோதிலும், இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் கிடையாது என்று அவர் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் கைது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்ட கருத்துகள் தேவையற்றது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. **Randhir Jaiswal** இந்தியாவின் தேர்தல் மற்றும் சட்ட நடைமுறைகள் குறித்து, வெளிநாட்டில் இருந்து இதுபோன்ற எந்தவொரு குற்றச்சாட்டையும் முற்றிலும் ஏற்க முடியாது என்று கூறினார்.

சட்ட விதிப்படியே நடைமுறைகள் மேற்கொள்ளப்படுவதாக உறுதிபட கூறிய அவர், ஜனநாயகத்தை கடைபிடிக்கும் எந்தவொரு நாடும் இந்தியாவின் நடவடிக்கையை குறைகூற முடியாது என்றார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் மக்களவை தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெற்றது.

முக்கிய கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

மனுக்களை விலக்கிக்கொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

அன்றைய தினம் மாலையே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

வாக்குப்பதிவு அடுத்த மாதம் 19-ஆம் தேதியும், வாக்கு எண்ணிக்கை ஜூன் மாதம் 4-ஆம் தேதியும் நடைபெறும்.

மக்களவைத் தேர்தலோடு நடைபெறவுள்ள விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனையும் இன்று நடைபெற்றது.

இதனையடுத்து, தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

திமுக, அஇஅதிமுக, பிஜேபி மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

<<<<<>>>>>

தமிழகத்தில், தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் தொடர்பாக பெறப்படும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹூ கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பான புகார்களை தெரிவிப்பதற்கென உருவாக்கப்பட்டுள்ள “சி-விஜில்” என்ற கைபேசி செயலி தொடர்பாக ஊடகங்கள் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மக்களவைத் தேர்தலுக்கான பணிகள் அனைத்தும் சுமூகமாக நடைபெற்று வருவதாகவும் திரு சத்யபிரத சாஹூ கூறினார்.

<<<<<>>>>>

மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி தேர்தல் ஆணையம் நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

தமிழகத்திலும், வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை முதல் முறை வாக்காளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்..

திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்த  முதல் முறை வாக்காளர்கள், வாக்குப்பதிவு நாளன்று அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - வாக்காளர்கள் - 30 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

ஜம்மு காஷ்மீரிலிருந்து வெளியேறி பல்வேறு நகரங்களிலும் குடியேறியுள்ளவர்கள் வாக்களிக்க சிறப்பு ஏற்பாட்டை தேர்தல் ஆணையம் செய்துள்ளது.

ஜம்மு காஷ்மீரில் மக்களவைத் தேர்தலின்போது ஜம்மு, உதம்பூர், மற்றும் தில்லி முகாம்களில் தங்கியுள்ள காஷ்மீர் மக்கள் நேரில் வந்து வாக்களிக்கவும், தபால் மூலமாக வாக்களிக்கவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<<>>>>>

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் ஏழு பேரை அந்நாட்டு நீதிமன்றம் விடுவித்துள்ளது.

ராமேஸ்வரத்திலிருந்து கடந்த 21-ஆம்தேதி மீன்பிடிக்க சென்ற இந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் சென்ற இரண்டு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டது.

இலங்கையின் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டிருந்து ஏழு மீனவர்களையும் நிபந்தனைகளுடன் விடுதலை செய்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவர்கள் இந்திய துணைத்தூரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விரைவில் அவர்கள் தாயகம் திரும்புவார்கள் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

**JEE** இரண்டாம் கட்ட மெயின் தேர்வுகளை எழுதும் விண்ணப்பதார்களுக்கான தேர்வு மைய நகரங்களை தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ளது.

ஏப்ரல் 4-ம் தேதி முதல் 12-ம் தேதிவரை வெளிநாடுகளில் 22 நகரங்கள் உட்பட 319 நகரங்களில் இந்த தேர்வு நடைபெறவுள்ளது.

தினமும் காலை மாலை இரண்டு வேளையும் இந்த தேர்வு நடைபெறவுள்ள நிலையில் விண்ணப்பதாரர்கள் தாங்கள் பங்கேற்கும் தேர்வு கூட நகரங்களை அறிந்துகொள்ள முன்கூட்டியே இந்த அறிவிப்பை அந்த முகமை வெளியிட்டு உள்ளது.

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

தாய்லாந்து சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shetty** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-12, 13-21, 21-10 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Krishna Adi Nugraha** –ஐ வென்றார்.

-------------

ஸ்பெயின் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-14, 21-12 என்ற செட் கணக்கில், சீன தை-பேயின் **Huang Yu Hsun**-ஐ வென்றார்.

------------------

ஆசிய கோப்பை மூவர் கூடைப்பந்து போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா, தகுதி சுற்று ஆட்டங்களில் வெற்றிபெற்றது.

-------------

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சீமா வெண்கலப்பதக்கம் வென்றார்.

----------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

ஜெய்ப்பூரில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில், டாஸ் வென்ற தில்லி அணி பந்துவீச தீர்மானித்துள்ளது

**<<<<<END>>>>>**